## பாடம் - 20



விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் தொலைக்காட்சியும் ஒன்றாகும். இது ஒலியும் ஒளியும் சேர்ந்த சாதனம் ஆகும். இன்று தொலைக்காட்சி உலகில் முக்கிய சாதனமாக மாறி விட்டது.

வானொலியில் ஒலியை மட்டும் கேட்க முடியும்; காட்சிகளைப் பார்க்க முடியாது. ஆனால் தொலைக் காட்சியில் தொலைவில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும், பார்த்தும் கேட்டும் மகிழலாம்.

தொலைக்காட்சி மூலம் உலக நிகழ்ச்சிகளை வீட்டில் இருந்தே காணமுடியும். விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இசை, நாடகம், திரைப்படம் ஆகிய பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும் பார்த்து மகிழலாம்.

இயற்கைக் காட்சிகளையும் விநோதமான காட்சிகளையும் காணலாம். கல்வி நிகழ்ச்சிகளைப் பார்த்தும் விளக்கம் பெறலாம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதன் அருகில் இருந்து பார்க்கக் கூடாது. வெளிச்சம் உள்ள அறையில் சற்றுத் தொலைவில் இருந்தே பார்க்க வேண்டும்.

தொலைக்காட்சியில் நமக்குப் பயனுள்ள நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க வேண்டும்.

குறிப்பு : ▪ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பயனுள்ள நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து மாணவர்களை பார்த்து ரசிக்க வழிப்படுத்துக.